# உலகத் தமிழ்

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

இதழ் - ரு | திருவள்ளுவராண்டு 2050 | 08.01.2020




**விசையுறு பந்தினைப்போல் - உள்ளம்**
**வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்,**
**நசையறு மனங்கேட்டேன் - நித்தம்**
**நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்**

*— பாரதியார்*



## திரு.க.பாண்டியராசன்

தமிழ் ஆட்சி மொழி மற்றும்
தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர்

## நிறுவன மதிப்பீடுகள்

***மா**ண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராசன் அவர்கள் இந்திய அலுவலர்கள் சங்கத்தின் 110 ஆம் ஆண்டு மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்று ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம் பின்வருமாறு:-*

*தொலைநோக்குப் பார்வையுடைய ஒருவர், கூட்டுப் பங்கு நிறுவனம் குறித்து சிந்தித்து, முன்னர் ரூ.2.5 கோடியை டைட்டன் நிறுவனத்தில் முதலீடு செய்திருந்தால், பல வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு, அதனை அவர்கள் மானியமாக அளித்திருக்கக்கூடும், ஆனால் அதை முதலீடாக அளித்தார்கள் எனில் முதலீடாக அளிக்கப்பட்ட ரூ.2.5 கோடியை தற்போது வெளிச்சந்தையில் விற்பனை செய்வதனால், அதன் மதிப்பு இன்றைய சூழலில் ரூ.7600 கோடியாக இருக்கும்.*

*நீங்கள் உருவாக்கும் நிறுவனத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பிற்கான அத்தகைய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுமாயின், இந்த 200 கோடியிலிருந்து, நீங்கள் பலமடங்கு இலாபத்தைப் பெறுவதுடன், சில ஆண்டுகளுக்குப் பின்னர் ரூ.2000 கோடித் தொகை கூட உங்களுக்கு கிடைக்கப் பெறலாம். இவ்வாறு, நீங்கள் பல நிறுவனங்களை உருவாக்குகிறீர்கள், மதிப்பீடுகளையும் உருவாக்குகிறீர்கள்!" என்று நான் முதலமைச்சரிடம் கூறினேன்.*

*மதிப்பு குறித்த கருத்து, வணிக மாதிரி குறித்த கருத்து மற்றும் துணிகர மூலதனம் குறித்த கருத்து – இம்மூன்று சொற்றொடர்கள் குறித்தும், 1999ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை இச்சொற்றொடர்கள் அனைத்தும் முற்றிலும் புதிய பொருள்களை கொண்டதையும் நான் கூறினேன். திரு.பிரகலாத், "GIVE" குறித்து பேசியபோதுதான் V என்ற எழுத்திற்கு மதிப்பு (value) எனவும், ஒரு தொழில்முனைவோர் அதனை மதிப்பீடு எனவும், தொழில்முனைவோர், 'நிறுவனத்தின் மதிப்பு' என்றால், அளவு + நோக்கம்+ ஆழம் எனவும் கூறினார். இதில் ஆழம் என்பது நிதி ஆழத்தை,*

*குறிப்பாக, அறிவுசார் உடைமையின் அளவைக் குறிக்கிறது. இவ்வாறு, அக்காலக்கட்டத்தில், நிறுவனங்கள், அவர்கள் ஈட்டும் விற்று முதல் அல்லது இலாபத்தை கொண்டு அல்லாமல் அவை நிறுவப்பட்ட கருத்தியல்கள், பயன்படுத்தும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டன. இது ஒரு முக்கிய திருப்புமுனையாகவும், என் பார்வையில், அக்காலக்கட்டத்தில் மேலாண்மையில் அது மிகப் பெரிய ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியதாகவும் நான் கருதுகிறேன்.*

*-நிறைவு-*

## ஆசிரியர் பகுதி

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகவும், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநராகவும் திகழும் பெருந்தகை முனைவர் கோ.விசயராகவன் அண்மையில் உரையாற்றும்போது, ஒரு சிறந்த கருத்தினைக் குறிப்பிட்டார். நூற்றுக்கணக்கான அறக்கட்டளைகளை ஏற்று உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. தமிழ் வளர்ச்சித்துறை அயல் மாநிலங்களுக்கும், அயல் நாடுகளுக்கும் வரையாது வழங்கும் வன்மையுடைதாக அமைகிறது.

அயல் நாடுகளோ, அயல் மாநிலங்களோ சார்ந்த மன்றத்தினர் தமிழகத்தை நோக்கி வரும்போதெல்லாம் நிதிக்கொடைதான் கேட்கின்றார்கள். அமெரிக்கத் தமிழர்களின் ஆய்விருக்கை, இங்கிலாந்துத் தமிழர்களின் ஆய்விருக்கை, பிரெஞ்சுத் தமிழர்களின் ஆய்விருக்கை, கனடியத் தமிழர்களின் ஆய்விருக்கை, சுவிசு தமிழர்களின் ஆய்விருக்கை, மோரீசின் ஆய்விருக்கை என்று தொடங்குகிற வாய்ப்பினை அவர்களே ஏற்று உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தொடங்கினால் நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்போம் என்றார்.

நிதி நிலையில் மிகுந்தவர்கள், தாய்த் தமிழகத்திற்கு அறக்கட்டளைகளை உருவாக்கினால், மேலும் பெருமிதம் உண்டாகும். உலகத் தமிழ் செழித்தோங்குவதற்கு இப்படிக் கொண்டும், கொடுத்தும் பெருமை சேர்க்க வேண்டும். இந்தக் கருத்துரையை நாம் அனைத்து நாட்டினரிடமும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்குச் சேர்ப்பீர்" என்று பாரதியார் வேண்டி விழைந்ததும் இந்த நோக்கத்தில்தான். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், எல்லா நிலைகளிலும் விரிந்து பரந்த மனத்தோடு விழுமியங்களைக் காக்க முன் நிற்கிறது. இயக்குநரின் இந்த விழைவு நிறைவேறுமாக!

## உலகளாவிய தமிழ் அமைப்புகள்

**முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர்**
*தமிழ் இணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.*



*உலகளாவிய தமிழ் அமைப்புகளைப் பற்றி ஆராயும் பொழுது தமிழோடு தொர்புடைய முதல், இடை, கடைச் சங்கங்கள் சமணம், புத்தம் முதலிய சமயங்களுடன் தொடர்புபடுத்தப்பட்ட சங்கங்கள், மன்றங்கள், அவைகள், கணங்கள், சைவ , வைணவ, கிறித்துவ மடங்கள், எவ்வாறு அமைப்பு சார்ந்து முறையுடன் தமிழைப் போற்றி வளர்த்தன என்பது குறித்தும் ஆராயப் பட வேண்டும். தமிழ்நாட்டு வணிகர்கள் (GUILDS) என்ற பல்வகையான வணிகக் கூட்டமைப்பு பெற்றிருந்த வணிகச் செல்வாக்கு, சிறப்பு அன்றைய உலகளாவிய வர்த்தகத்தில் தமிழரின் பங்கு குறித்தும் ஆராயப்பட வேண்டும்.*

*மேலும் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களின் தாய்நாடுகளான நம் இரத்த உறவுகள் காலனி ஆதிக்கத்தால் ஒப்பந்தக் கூலிகளாகச் சிதறடிக்கப்பட்டு இன்று அந்த நாடுகளை தன் உழைப்பாலும் இரத்தத்தாலும் வளப்படுத்தியதால் அவர்களுக்கே உரிய சிறப்பான வாழ்வினை உரிமையோடு பெற்று வாழ்ந்து வருகின்றனர்.*

*மலேசியா, சிங்கப்பூர், பர்மா, பிஜி தீவு, மொரிசியஸ், தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் வாழ்ந்து அவர்கள் தமிழ் மொழி, பண்பாடு, இலக்கியம், விழுமியங்கள் பக்தி போன்றவற்றைப் பாதுகாக்க போராடி தற்காத்து வருகின்றன தன்மையும் ஆராயப்பட வேண்டும். மேலும் தமிழகத்தில் ஏற்பட்ட தகவல் புரட்சியால் பன்னாடுகளுக்குப் புலம் பெயர்ந்த தமிழர்கள் தமிழ்ச் சங்கங்களை நிறுவி, எவ்வாறு பணியாற்றி வருகின்றனர் என்பதும் ஆராய்ப்பட வேண்டும்.*

*மேலும் பல நெருக்கடியினால் ஏற்பட்ட புலம் பெயர்வினால் தமிழர்கள் உலகெங்கும் பரவி தங்கள் இன, மொழி அடையாளங்களைப் பாதுகாக்க முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.*

*மேலும் தகவல் தொழில் நுட்ப அறிவினால் உலகெங்கும் பரந்து இருக்கின்ற இணைய தமிழ் இளைஞர்கள். கன்னித் தமிழை கணினித் தமிழாக மாற்றி வருகின்றனர். உலகத் தகவல் தொழில் நுட்பமன்றம் (INFITT) தொடர்ந்து மாநாடுகளை உலகெங்கும் நிகழ்த்தி தமிழ் இணைய புரட்சி செய்து வருகின்றனர்.*

....வளரும்

# ஔவையார்

**ஆத்திசூடி** | **ATTISUDI**

| آثي سودي | 阿媞邱立

ആത്തി ചൂടി |

**आत्तिचूड़ी** | ଆତ୍ତିଝୁଡି |

ಆಝೂಡಿ

**உடையது விளம்பேல்**

Pride not in your possessions

لا تفتخر بما عندك

不以財富為驕傲

രഹസ്യം
വെളിപ്പടുത്തരുത്

अपने स्वत्व का बड़प्पन खुद व्यक्त न करें |

నీ దగర ఉండు రహస్యాన్ని అందరికీ
తెలిసేనట్లు చెప్పరాదు

ನಿನ್ನತ್ರ ಇರುವಂತ
ರಹಸ್ಯವನ್ನು ಎಲ್ಲರಿಗೂ
ತಿಳಿಯುವಂತೆ ಮಾತಾಡಬೇಡ



பிரெஞ்சு கலைக்கழகம் முனைவர் ந.அருள் இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை



**அறிவியல் ஆற்றல் மற்றும் கொள்கை சார்ந்த நிறுவனம்**

*1795ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நிறுவனம், 1803ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டு, கியுசாயிட் (Guizot) – இன் முயற்சியால், 1832ஆம் ஆண்டு மீண்டும் புத்துயிர் பெற்றது. னிதநேயத்துடன், சட்டம் மற்றும் பொருளாதாரக் கொள்கையின்படி சமூகப் பிரச்சனைகளுக்கு இந்நிறுவனம் தீர்வு காண்கிறது. இந்நிறுவனம் சட்டப்படியான 50 உறுப்பினர்களையும், 12 அயல்நாட்டு நிருவாகிகளையும் 60 நிறுவனப் பேராளர்களையும் இந்நிறுவனம் கொண்டுள்ளது.*

*கல்வியாளர்கள் (கல்வி நிறுவனங்களின் உறுப்பினர்கள்) நிரந்தரமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நெப்போலியன் காலத்திலிருந்து, அவர்கள் பச்சை நிற ஆடையணிந்து ( "habbit vert") உரிமையாளரின் வாழ்க்கையை எடுத்துரைக்கும் குறியீடுகள் பொறிக்கப்பட்டிருக்கும் கலை வேலைப்பாடுகள் நிறைந்த வாளினைக் கையில் ஏந்தி வருகிறார்கள். இம்மாடத்தில் நடைபெறும் பின்வரும் முறைப்படியான கூட்டத் தொடர்களில், இந்த உடை அணியப்படுகிறது. அவையாவன:*

- ◊ *நிறுவனம் தொடங்கப்பட்ட நாளான அக்டோபர் மாதம் 25 ஆம் நாள் நெருக்கத்தில் வரும் செவ்வாய் கிழமை அன்று நடைபெறும் ஐந்து நிறுவனங்களின் ஆண்டு பொதுக் கூட்டத்தொடர் ( அல்லது "இலையுதிர் காலக் கூட்டத்தொடர்"). இக்கூட்டத்தொடரில் ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் வருகை தரும் சிறப்புப் பிரதிநிதிகள் ஒரு பொதுவான தலைப்பில் உரையாற்றுவர்;*
- ◊ *ஐந்து நிறுவனங்கள் ஒவ்வொன்றின் இலையுதிர் காலக் கூட்டத்தொடர்.*
- ◊ *ஜூன் மாதம் இரண்டாவது புதன் அன்று நடைபெறும், பிரான்சு கல்வி நிறுவனம் துவங்கப்பட்டதையொட்டி அளிக்கப்படும் மாபெரும் பரிசு வழங்கும் விழா;*
- ◊ *நிறுவனத்தின் இருநூறாம் ஆண்டினைக் கொண்டாடுவதற்காக, 1995ஆம் ஆண்டு நடைபெற்ற விழா, 2005 ஆம் ஆண்டில் மாநிலத்திலிருந்து தேவாலயத்தைத் தனியாகப் பிரித்துச் சட்டம் இயற்றப்பட்ட நூறு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற நூற்றாண்டு விழா அல்லது 2016ஆம் ஆண்டில் நடைபெற்ற அறிவியல் கல்வி நிறுவனத்தின் 250ஆவது ஆண்டு விழா போன்ற விதிவிலக்கான கூட்டத்தொடர்கள்.*
- ◊ *பிரெஞ்சு நிறுவனம், அறிவியல் நிறுவனம், கவின் கலை நிறுவனம் மற்றும் அறிவியல் ஆற்றல் மற்றும் கொள்கைகளுக்கான நிறுவனம் ஆகியவற்றின் புதிய உறுப்பினர்களை வரவேற்பதற்காக நடைபெற்ற நிகழ்வுகள்.*

தொடரும்...



## தமிழ்த் தூது

## தனிநாயக அடிகள்



இந்திய நாட்டில் இந்தியக் கலைஞரால் யாக்கப்பெற்ற இலக்கிய வரலாற்று நூல்களிலும், தமிழுக்குத் தகுந்த இடமும் புகழும் அளிக்கப்படவில்லை ." இந்தியக் குடியரசின் முதல் அமைச்சர் உயர்திரு. நேரு தாமும், தம் நூல்களில், தென்னாட்டிற்குச் சிறிதளவே இடம் ஈந்துள் ளார். "இந்திய வரலாறு தென்னாட்டில் முதல் உறைவிடம் காணும்," என்றும், "தென்னாட்டில் மிகு பழைமை வாய்ந்த பொருள்களும் மக்களும் உண்டு," என்று மட்டும் கூறி, மேலே செல்லுகின்றார்கள் இந்நூலாசிரியர்கள். இம்மொழியின் சிறப்பியல்பை, இம்மக்கள் உலகிற்கு ஈந்த இலக்கியத்தின் தனித் தன்மையை அவர்களுடைய பனுவல்களைப் புரட்டிப் பார்க்கினும் காண்டல் அரிது.

நாட்டை விட்டுப் பெயர்ந்து ஏறக்குறைய ஈராண்டுகள் ஆகிய பின்னர், தமிழ்த் திருநாட்டை மீண்டும் என் கண்கள் பார்த்தன. இவ்வீராண்டுகளில் நான் மலாயா, சீனம், ஜப்பான், வடவமெரிக்கா, தென்னமெரிக்கா, நடு ஆபிரிக்கா, வடவாபிரிக்கா, இத்தாலி, பலத்தீனா, எகிப்து என்னும் இந்நாடுகளைக் கண்டு வந்தேன்.

தமிழைப் பொறுத்த வரை நான் அடைந்த பெருவியப்பு, தமிழும் தமிழரும் உலகிற்பரவியிருக்கும் வகை கண்டு ஏற்பட்டதேயாம். பர்மாவில் தமிழ் மொழிக்குச் செல்வாக்குண்டு. நடு அமெரிக்காவின் தீவுகளாகிய திரி நாடு, ஜமேக்கா, அட்லாண்டிக்குத் தீவுகளாகிய மார்த்தீனிக்கு, ஆபிரிக்காவின் பல பிரிவுகள், இன்னோரன்ன இடங்களுக்குச் சென்ற தமிழர் பெருஞ்சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும், மலாயாவிற்குச் சென்ற பொழுது நான் அடைந்தது போன்ற வியப்பு வேறு எவ்விடத்திலும் நான் அடைந்தேன் அல்லேன். ஆங்குள்ள இந்தியர்களில் தமிழரே பெரும் பகுதியினர். அங்குத் தமிழ் நாட் செய்தித் தாள்கள் நான்கு ஐந்து வெளியிடுகின்றனர்.

சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய பேரூர்களின் வானொலி நிலையங்கள், தமிழில் நாள்தோறும் ஒலி பரப்புகின்றன என்பது அறிந்தும், பெரிதும் மகிழ்ந்தேன். மேலும், நான் அங்கு சென்றிருந்தக்கால், மலாயாவின் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவத் திட்டங்கள் வகுத்து வந்தனர். அப்பல்கலைக் கழகத்தில், தமிழிற்கும் ஒரு பேராசிரியக்கட்டில் நிறுவ வேண்டுமென்று இலங்கைத் தமிழரும் இந்தியத் தமிழரும் முயன்று வந்தது, என் களிப்பிற்கு இன்னுமொரு காரணமாயிற்று.

வளரும்...

## கல்லால் ஒரு கலைக்களஞ்சியம்




கடல் மல்லை

அரசாணை (நிலை) எண்.70, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(M-2)த் துறை, 26.08.2011

| வ.எண் | வேதிமச் சொல் | சொல்லாக்கம் |
|---|---|---|
| 1 | Acetaldehyde | அசிட்டால்டிஃகைடு |
| 2 | Acetic acid | அசிட்டிக் காடி |
| 3 | Acetic anhydride | அசிட்டிக் அன் ஐதரைடு |
| 4 | Acetone | அசிட்டோன் |
| 5 | Acetone cyanohydrin | அசிட்டோன் சயனோ ஐதரின் |
| 6 | Acetone thiosemicarbazide | அசிட்டோன் தையோ-செமி கார்பாசைடு |
| 7 | Acetonitrile | அசிட்டோன் நைட்ரைல் |
| 8 | Acetylene | அசிட்டிலீன் |
| 9 | Acetyl tetra chloride | அசிட்டைல் தெட்ரா குளோரைடு |
| 10 | Acrolein | அக்குரோலைன் |
| 11 | Acrylamide | அக்கிரிலமைடு |
| 12 | Acrylonitrile | அக்கிரிலோ நைட்ரைல் |
| 13 | Adiponitrile | அடிப்போ நைட்ரைல் |
| 14 | Aldicarb | ஆல்டிகார்பு |
| 15 | Aldrin | ஆல்டிரின் |
| 16 | Allyl Alcohol | அல்லைல் சாராயம் |
| 17 | Allylamine | அல்லைல் அமீன் |
| 18 | Allyl chloride | அல்லைல் குளோரைடு |
| 19 | Aluminium (powder) | அலுமினியம் (தூள்) |
| 20 | Aluminium azide | அலுமினியம் அசைடு |

தமிழ்நாடு சட்ட மன்றப்பேரவையில் தமிழக ஆளுநர் உரை—06.01.2020



திரு.பன்வாரிலால் புரோகித்

### தமிழ் வளர்ச்சி

*தமிழ் மொழி மற்றும் தமிழர் பண்பாட்டை ஊக்குவிப்பதில் இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. 1956இல், தமிழ்நாடு மாநிலம் உருவான நாளை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் ஒன்றாம் தேதியை 'தமிழ்நாடு நாள்' என அறிவித்ததற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரை பாராட்டுகிறேன்.*

*2019ஆம் ஆண்டு சூலை மாதம் சிகாகோவில் நடைபெற்ற 10 ஆவது உலகத் தமிழ் ஆய்வு மாநாட்டுக்குத் தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்ததோடு, அமெரிக்காவிலுள்ள ஊசுடன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க 1 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது.*

## இரு நாடுகளில் ஒலித்த ஒரே குரல் !



நியூசிலாந்தில் பொழுது விடியும் போது தென்னாப்பிரிக்காவில் பொழுது முடிந்து இரவு படரும் நேரம் அமையும். இந்த இரு நாடுகளும் இங்கிலாந்து நாட்டின் ஆளுகைக்கு ஒரு காலத்தில் அகப்பட்டிருந்தன.

இதனைக் கருதியே எங்கள் நாட்டின் - ஆளுகையில் **"கதிரவன் மறைவதே இல்லை"** என்று ஆங்கிலேயர்கள் பெருமிதமாகக் கூறினார்கள்.

அதே குரலில் புறநானூற்றில் ஒரு பாடல் அமைந்திருப்பது வியப்பாகும்.

பெருஞ்சோற்றுதியன் சேரலாதனைப் புகழ்ந்த முரஞ்சியூர் முடிநாகராயர் சேர நாட்டு எல்லை எவ்வாறு பரந்திருந்தது என்று பாடும்போது **"உனது நாட்டுக் கடலில் தான் ஞாயிறு தோன்றுகிறது, அதே போல உனது நாட்டுக்கடலில் தான் ஞாயிறு மறைகிறது"** என்று பாடினார்.

**நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்**

**வெண்தலைப் புணரிக் குடகடல் குளிக்கும்**

**யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந !**

(புறநானூறு பாடல்-2)




## செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்

**09.01.2020**









## செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்

08.01.2020




09.01.2020—IIT, Chennai






Artistic Direction : Kavitha Krishnan
Singapore

09.01.2020




09.01.2020




10.01.2020




10.01.2020




10.01.2020




10.01.2020



## செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்

10.01.2020




11.01.2020





11.01.2020




11.01.2020




11.01.2020




12.01.2020




11.01.2020




11.01.2020




## செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்

12.01.2020




12.01.2020




14.01.2020







***தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை மற்றும் சென்னை இலக்கியத்திருவிழா அமைப்பு இணைந்து நடத்தும் தொல்லியல் ஆய்வுகள் - பயிலரங்கம்.***

இடம் : கல்லூரி வளாகம், தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்பேடு, சென்னை -107. *நாள் :* 9.1.20 நண்பகல் 1.30.

***சாகித்திய அகாதெமி நடத்தும் புத்தக மதிப்புரை நிகழ்ச்சி. பீஷ்ம சாஹ்னி எழுதிய 'தமஸ்' - நூல் மதிப்புரை;***

இடம் : 443, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18.
*நாள் :* 10.1.20 மாலை 5.00.

***பண்ணைத் தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ்க் கூடல்.***

இடம் : பாவேந்தர் இல்லம், 34/11, மூன்றாவது தெரு, வங்கிக் குடியிருப்பு, மாதவரம் பால்பண்ணை , சென்னை -51.
*நாள் :* 11.1.20 மாலை 5.00.

***எழில் இலக்கியப் பேரவை நடத்தும் இலக்கிய நிகழ்ச்சி.***

இடம் : முத்தமிழ் மன்றம், திண் ஊர்தித் தொழிலகம், 17, திருவள்ளுவர் சாலை, கோயில் பதாகை, ஆவடி, சென்னை -62.
*நாள் :* 12.1.20 மாலை 4.25.

***வாழ்வியல் நெறிமுறை மன்றம் நடத்தும் சிறப்பு நிகழ்ச்சி.***

இடம் : முத்துச்சாமி; அருள்மிகு பெரியநாயகி உடனமர் கைலாசநாதர் ஆலய வளாகம், தேவாசிரிய மண்டபம், ஊத்துக்குளி.
*நாள் :* 12.1.20 காலை 9.00.

***இலக்கியச் சோலை நடத்தும் கவியரங்கம்.***

இடம் : இக்சா மையம், 107,பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை -8.
*நாள் :* 12.1.20 மாலை 4.00.

***பூவை தொன்மைத் தமிழ்ச்சங்கம் நடத்தும் முத்தமிழ் அரங்கம்.***

இடம் : ஸ்ரீசத்யா மேனிலைப்பள்ளி, நீதியரசர் செல்லப்பா தெரு, பூவிருந்தவல்லி, சென்னை .
*நாள் :* 12.1.20 காலை 10.00.

## உலகத்தமிழுக்கு வரப்பெற்ற கருத்துரைகள்

பூத்திருக்கும் புத்தாண்டு போலவே புன்னகையோடு வந்துள்ளது உலகத் தமிழின் நான்காவது இதழ்.
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மிளிர்கிறது இதழ்...
ஆசிரியருக்கு பாராட்டுக்கள்.
தமிழ் நாட்டில் பதிவு செய்து செயல் பட்டு வரும் பொதிகைத் தமிழ்ச் சங்கம் (பதிவு எண்:99/2016) உள்பட எல்லா தமிழ்ச் சங்கங்கள் பற்றி எழுதலாமே.

**கவிஞர் பேரா தலைவர் பொதிகைத் தமிழ்ச் சங்கம் திருநெல்வேலி.**

உலக அளவிலான தமிழ்க் கவிதை நூல்களுக்கான போட்டி பற்றிய அறிவிப்பு உலகத் தமிழ் இ மெயில் முகவரிக்கு அனுப்பியுள்ளேன்.அதை வெளியிட்டு உலக அளவில் எடுத்துச் செல்ல வேண்டுகிறேன் ஐயா.

மின்னிதழ்........ நன்னிதழ் ஐயா......
**சு.இரவிச்சந்திரன், பிரிவு அலுவலர், மொழிபெயர்ப்புத் துறை**

ஓ சிறப்பு
**இராசி அழகப்பன்**

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் வெளியிடப்பெற்று வரும் "உலகத்தமிழ்" மின்னிதழில் இவ்வார நிகழ்வுகள் பகுதியில் தேனித் தமிழ்ச் சங்கத்தின் நான்காட்டி இடம் பெற்றிருக்கிறது. உலகத்தமிழ் மின்னிதழில் நாட்காட்டியின் படத்தை இடம் பெறச் செய்த தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலக மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் அவர்களுக்கு நன்றி...

**தேனி சுப்பிரமணியன்**

இனிய புத்தாண்டுவாழ்த்துக்கள் ஐயா.
**திருமதி.மீனாட்சி, மும்பை.**

அருமை சார்
**திருமதி.சுபாமதி, துணை இயக்குநர், மொழிபெயர்ப்புத்துறை**

'முகை'யாய் மிளிரும் உலகத்தமிழ் 'மொட்டாய்' ' மலராய்'ப் 'போதாய்' ' செம்மலா'கி செம்மாந்த வெற்றிபெறுமெனும் நம்பிக்கை உறுதியாகின்றது.நெஞ்சார்ந்த வாழ்த்துகள் ! நீடுவாழ்க.!
**முனைவர். மு.கண்ணன்**
**பதிப்பாசிரியர், சொற்பிறப்பியல் அகரமுதலி இயக்ககம்**

நறுமுகம்
**திரு.சாய் சேஷன், சென்னை.**

வாழ்த்துகள்
**முனைவர் பசும்பொன்**

பாராட்டுக்கள்!
**திரு.குணசேகரன், இணை இயக்குநர் (ஓய்வு), பள்ளிக்கல்வித்துறை**

வேறு எங்கோ ஒரு வியப்பான உலகிற்குச் செல்ல விழைவோருக்கெனக் கண்டெடுக்கப்பட்ட புதையல் தான் புத்தகக் குவியல்

- அறிஞர் மார்க் டுவைன்

### அளவீடு

பாடல்களைக் கணக்கிட்டுச் சொல்வது ஒரு முறை.
இந்நாளில் அடி வரையறையைக் கணக்கிடுகிற வழக்கமும் உண்டு.
நாளேடுகளில் எண்ணூறுக்கு மேலான சொற்கள் போதும் என்று வேண்டுவதும் உண்டு.

தொல்காப்பியம் - 3999 அடி ; திருக்குறள்-2660 அடி ; பத்துப்பாட்டு -3551 அடி
சிலப்பதிகாரம் - 5001 அடி; மணிமேகலை - 4759 அடி

இவ்வாறு கணக்கிட்டவர் அறிஞர் வ.சுப.மாணிக்கம் என்பது குறிப்பிடத்தக்கது.